258, எம் வின்சென்ட்
பெரேரா மாவத்தை
கொழும்பு 14
0114700800

# யூனிலீவர் நிறுவனம் மீண்டும் ஒரு தடவை இலங்கையில் மிகவும் மதிப்பிற்குரிய விரைவாக விற்பனையாகும் நுகர்வோர் பொருட்கள் நிறுவனமாக முதலிடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது

*'நுகர்வோர் பொருட்கள்' மற்றும் 'பல்தேசிய நிறுவனங்கள்' பிரிவுகளில் துறைசார் வெற்றியாளராகவும் அறிவிக்கப்பட்டது*

**கொழும்பு, ஆகஸ்ட் 19, 2022:** 2022 ஆம் ஆண்டிற்கான LMD இன் மிகவும் மதிப்பிற்குரிய நிறுவனங்களின் பட்டியல் வெளியீட்டில் யூனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனம் நாட்டிலேயே 1 ஆவது ஸ்தானத்திலுள்ள மிகவும் மதிக்கப்படும் விரைவாக விற்பனையாகும் நுகர்வோர் பொருட்கள் நிறுவனமாகத் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது. நிறுவனம் தொடர்ந்து 17 ஆவது ஆண்டாக இத்தரவரிசைப் பட்டியலில் இடம்பிடித்துள்ளதுடன், 2021 ஆம் ஆண்டில் காணப்பட்ட தரவரிசையிலிருந்து 4 இடங்கள் முன்னேறி, 100 இற்கும் மேற்பட்ட பல்வேறு துறைசார் நிறுவனங்கள் மத்தியில் ஒட்டுமொத்தமாக 6 ஆவது ஸ்தானத்தைத் தனதாக்கியுள்ளது. 'நுகர்வோர் பொருட்கள்' "பல்தேசிய நிறுவனங்கள்' ஆகிய இரு பிரிவுகளிலும் யூனிலீவர் மீண்டும் துறைசார் வெற்றியாளராக அறிவிக்கப்பட்டுள்ளதுடன், தனது வெற்றிப் பயணத்தைத் தொடர்ந்தும் தக்க வைத்துள்ளது.

இத்தரவரிசைகளை வழங்குவதில் LMD இன் சிறந்த 12 செயல்திறன் குறிகாட்டிகளான, 'நிதியியல் பெறுபேற்றுத்திறன்', 'தர உணர்வு', 'முகாமைத்துவ நிர்வாகச் சுயவிவரம்', 'நேர்மை', 'புத்தாக்கம்', 'வலிமை ஆற்றல்', 'நிறுவன கலாச்சாரம்', 'வர்த்தக சமூகப் பொறுப்புணர்வு மற்றும் நிலைபேற்றியல்', 'குறிக்கோள் இலக்கு', 'தேசிய கண்ணோட்டம்', 'மனித வளம் மற்றும் பணியாளர் முகாமைத்துவம்', மற்றும் 'நெருக்கடி நிர்வாகம்' ஆகியவற்றில் அதியுயர் தரமதிப்பீட்டைப் பெற்ற விரைவாக விற்பனையாகும் நுகர்வோர் பொருட்கள் நிறுவனமாகவும் இந்நிறுவனம் மாறியுள்ளது.

**யூனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் பணிப்பாளர் சபைத் தலைவரும், முகாமைத்துவப் பணிப்பாளருமான ஹஜார் அலா.ஃபி.ஃபி** அவர்கள் இது தொடர்பில் தனது கருத்துக்களை பகிர்ந்து கொள்கையில், *"இலங்கையின் மிகவும் மதிப்பிற்குரிய விரைவாக விற்பனையாகும் நுகர்வோர் பொருட்கள் நிறுவனமாக மீண்டும் ஒருமுறை தரவரிசைப்படுத்தப்படுவது உண்மையிலேயே மிகவும் பெருமைக்குரிய மற்றும் கௌரவமான ஒரு தருணமாகும். இலங்கை மக்களால் தொடர்ந்து 17 ஆவது ஆண்டாகவும் அங்கீகரிக்கப்படுவது அதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் அமைந்துள்ளது. இது, பல ஆண்டுகளாக நமது நோக்குடனான வர்த்தகநாமங்கள், நிலைபேற்றியல் கொண்ட வாழ்வை அனைவருக்கும் பொதுவான ஒன்றாக மாற்றுவதற்கான எமது நிறுவன இலக்கு, நேர்மையைப் பொறுத்தவரையில் எமது பணியாளர்கள் மீது நாம் கொண்டுள்ள ஓயாத அர்ப்பணிப்பு மற்றும் எமது செயற்பாடுகள் அனைத்திலும் சிறப்பினை நிலைநாட்டுதல் ஆகியவற்றின் மூலமாக இலங்கை மக்களின் வாழ்வில் நாம் ஏற்படுத்திய நேர்மறையான தாக்கத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. பொருளாதாரம், சமூகம் மற்றும் சுற்றுச்சூழலில் சிறப்பான நிறுவன நடத்தையை ஊக்குவிக்கவும், அங்கீகரிக்கவும் ஒரு தளத்தை உருவாக்கியதற்காக LMD மற்றும் அதன் நிர்வாகத்திற்கு எங்கள் மனமார்ந்த பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறோம்,"* என்று குறிப்பிட்டார்.

கடந்த 84 ஆண்டுகளில், யூனிலீவர் நிறுவனம் இலங்கை சமூகத்தில் ஆழமாக வேரூன்றி, உண்மையான இலங்கை வாழ்க்கை முறையைப் பேணிப் பாதுகாத்து, அதனை வளர்க்கும் பின்னணியைப் பண்படுத்தி வந்துள்ளது. இது நாட்டின் மிகப்பெரிய விரைவாக விற்பனையாகும் நுகர்வோர் பொருட்கள் நிறுவனங்களில் ஒன்றாகும். அத்துடன் ஹொரணை என்ற இடத்தில் உள்ள அதன் உற்பத்தி தொழிற்சாலையிலும், உள்நாட்டிலுள்ள மூன்றாம் தரப்பு உற்பத்தித் தளங்களிலும் அதன் 96% தயாரிப்புகளை கடுமையான உற்பத்தித் தராதரங்களுடன் உற்பத்தி செய்து வருகிறது. நிறுவனத்தின் தயாரிப்புக்கள் வரிசையில் சன்லைட், சிக்னல், லைஃப்போய், நோர், விம் மற்றும் பலவற்றை உள்ளடக்கிய 30 சந்தை முன்னணி வர்த்தகநாமங்கள் உள்ளடக்கியுள்ளதுடன், இதன் மூலம் தினந்தோறும் 21 மில்லியன் இலங்கை மக்களின் வாழ்வும் மேம்பட்டு வருகின்றது.

இந்நிறுவனம் 2021 ஆம் ஆண்டில் தொடர்ந்து 10 ஆவது ஆண்டாகவும் ‘1 ஆவது ஸ்தானத்திலுள்ள அபிமானம் பெற்ற தொழில்தருநர்’ தரவரிசையில் NielsenIQ ஆல் வரிசைப்படுத்தப்பட்டுள்ளது. 2021 Effie விருதுகளில் தொடர்ந்து 6 ஆவது ஆண்டாக ‘மிகவும் திறன்மிக்க சந்தைப்படுத்துனர்’ விருதைப் பெற்றிருந்தது. அத்துடன், LMD இன் 2021 ஆம் ஆண்டுக்கான ‘மிகவும் கூடுதலான விருது’ வெளியீட்டில், ‘நுகர்வோர் பொருட்கள்’ மற்றும் ‘பல்தேசிய நிறுவனங்கள்’ ஆகிய பிரிவுகளில் ‘மிகவும் கூடுதலான விருதுகளை வென்ற நிறுவனம்’ என்ற தரப்படுத்தலைப் பெற்றிருந்தது. LMD இன் 2022 ஆம் ஆண்டுக்கான Brands Annual தரப்படுத்தலில் யூனிலீவர் நிறுவனங்களின் 15 வர்த்தகநாமங்கள் இலங்கையிலுள்ள ‘மிகவும் அபிமானம் பெற்ற வர்த்தகநாமங்கள்’ என்ற தரப்படுத்தலைப் பெற்றிருந்தன. யூனிலீவர் நிறுவனத்தின் ஹொரணை தொழிற்சாலையானது, அதன் செயற்பாடுகள் மூலம் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்பை அடையாளம் காணவும், நிர்வகிக்கவும் மற்றும் குறைக்கவும் ஆற்றியுள்ள அர்ப்பணிப்பிற்காக இலங்கை தர நிர்ணய நிறுவனத்தால் (SLSI) ISO 14001:2015 சான்று அங்கீகாரத்தையும் பெற்றுள்ளது.

‘இலங்கையில் மிகவும் மதிக்கப்படும் நிறுவனங்கள்’ தரவரிசையானது இலங்கையின் முன்னணி வணிக சஞ்சிகையான LMD ஆல் கருத்தாக்கம் செய்யப்பட்டு NielsenIQ ஆல் நடத்தப்படும் வருடாந்த கருத்துக்கணிப்பின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது. LMD இன் மிகச் சிறந்த 100 நிறுவனங்கள் பட்டியல் (2020/21) மற்றும் Brands Annual 2021 பட்டியல் ஆகியவற்றுக்காக கொழும்பு பங்குச் சந்தையில் நிரற்படுத்தப்பட்டுள்ள நிறுவனங்களில் இருந்து 800 பேரின் பதில் அபிப்பிராயங்களை இந்த ஆண்டு கருத்துக்கணிப்பு உள்ளடக்கியுள்ளது. இறுதி தரவரிசை ஒவ்வொரு நிறுவனத்தினதும் புள்ளிகளினதும் மொத்த மதிப்பின் சராசரி அடிப்படையில் அமைந்தது.